உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்
தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 18.05.2026 • மலர் 04 • இதழ்: 138 • Edition : Nagercoil • 18.05.2026 • Vol : 04 • Issue : 138 • Page : 4 • Rs. 5/-

# ஒலிம்பிக் போட்டி நடத்துவது இந்தியாவின் ஆசை

## நெதர்லாந்து இந்தியர்களிடம் பிரதமர் மோடி உரை

தி ஹாக், மே. 18

ஒலிம்பிக் போட்டி நடத்துவது, உலக உற்பத்தி மையமாக இருப்பது உட்பட இந்தியாவுக்கு மிகப் பெரிய ஆசைகள் உள்ளன என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மோடி 5 நாடுகள் பயணம் மேற்கொண்டுள்ளார். முதல் நாடாக ஐக்கிய அரபு அமீரகம் சென்ற பிரதமர் மோடி எல்பிஜி, கச்சா எண்ணெய் விநியோகம், சேமிப்பு தொடர்பான ஒப்பந்தங்களை மேற்கொண்டார். அங்கிருந்து அவர் நெதர்லாந்து சென்றார். தி ஹாக் நகரில்

அங்குள்ள இந்தியர்கள் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அவர்களிடம் பிரதமர் மோடி பேசியதாவது: வளர்ச்சியடைந்த நாடுகள் போல், ஒலிம்பிக் போட்டியை நடத்த இந்தியாவும் விரும்புகிறது. அதே போல் உலகளாவிய உற்பத்தி மையமாகவும் பசுமை எரிசக்தி மையமாகவும் உலக பொருளாதார வளர்ச்சி மையமாகவும் இருக்க இந்தியா விரும்புகிறது.

இந்தியாவின் ஆசைகள், எண்ணங்கள், முயற்சிகளுக்கு எல்லையே இல்லை. எல்லா பொருட்களும் 'மேக் இன் இந்தியா'வாக இருப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை நாங்கள் எடுக்கிறோம். இதன் மூலம் இந்தியா உலகளாவிய உற்பத்தி மையமாக மாறும்.

இந்திய இளைஞர்கள் நவீன தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்குகின்றனர். அவர்களின் ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் வளர்ச்சியடைந்து வருகின்றன. செயற்கை நுண்ணறிவு (ஏஐ) பாதுகாப்பு, விண்வெளித் துறை ஆகிய அனைத்திலும் சிறப்புடன் செயல்படும் இந்திய இளைஞர்களுக்கு நன்றி. இந்தியா செமி கண்டக்டர் மையமாக மாறி வருகிறது. தற்போது 12 செமி கண்டக்டர் மையங்கள் இந்தியாவில் அமைக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் இரண்டில் உற்பத்தி ஏற்கெனவே தொடங்கிவிட்டது. தற்போது கம்ப்யூட்டர் சிப்ஸ்கள் இந்தியாவில் வடிவமைக்கப்பட்டு வருகின்றன. செல்போன் உற்பத்தியில் புரட்சி ஏற்பட்டு, உலக செல்போன் உற்பத்தியில் இந்தியா 2வது பெரிய நாடாக உள்ளது.

மிகப் பெரிய ஏஐ உச்சி மாநாடு இந்தியாவில் கடந்தாண்டு வெற்றிகரமாக நடைபெற்றது. பசுமை எரிசக்தி உற்பத்தியை அதிகரிக்க எனது ஆட்சியில் சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது. இந்தியாவில் அமைக்கப்படும் சோலார் பூங்காக்கள் உலகின் மிகப் பெரிய சோலார் பூங்காக்களில் ஒன்றாக உள்ளன.



புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் பிரேசிலை பின்னுக்கு தள்ளி இந்தியா 3ம் இடம் பிடித்துள்ளது. அடுத்த 2036ம் ஆண்டு இந்தியாவில் ஒலிம்பிக் போட்டி நடத்த திட்டமிடப்பட்டு வருகிறது. இதற்காக நெதர்லாந்துடன் கிரிக்கெட் மற்றும் ஹாக்கி விளையாட்டு போட்டிகளில் ஒத்துழைப்புடன் செயல்பட இந்தியா விரும்புகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

## ஆனைமங்கலம் செப்பேட்டை தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்க வேண்டும்

### முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பேச்சு

சென்னை, மே. 18

முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:



நெதர்லாந்தின் லெய்டன் நகரில் இருந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, 11ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஆனைமங்கலம் சோழர் செப்பேடுகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது, நமது பண்பாட்டின் பாரம்பரியத்தை மீட்டெடுக்கும் வரலாற்றுப் பயணத்தில் மிகுந்த வரவேற்பிற்குரிய முன்னேற்றமாகும். இந்த அரிய செப்பேடுகள் வெறும் தொல்பொருள் சின்னங்கள் அல்ல; தமிழர்களின் மகத்தான வரலாறு, பண்பாடு மற்றும் சோழப் பேரரசின் மகோன்னதத்தைப் பதிவு செய்த நிரந்தரச் சான்றுகள்!

கழகத் தலைவர் அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற போது, இச்செப்பேடுகளை தமிழ் நாட்டிற்கு மீண்டும் திரும்பக் கொண்டுவர அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என சட்டப்பேரவையில் அறிவித்ததுடன், மத்திய அரசிடமும் தொடர்ந்து வலியுறுத்தினோம். அனைவரின் தொடர் முயற்சிகளும் இணைந்து இன்று இத்தகையைப் பலனை அளித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்தியப் பிரதமர் அவர்களது நெதர்லாந்து பயணத்தில் இந்தப் செப்பேடுகள் ஒப்படைக்கப்படும் நிகழ்வினை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன்.

அதே வேளையில், இந்த ஆனைமங்கலம் செப்பேடுகளின் உண்மையான இருப்பிடம் தமிழ்மண்ணே ஆகும்! அதனை உணர்ந்து மத்திய அரசு இச்செப்பேடுகள் தமிழ்நாட்டிற்கே கொண்டுவரப்பட்டு தமிழ்நாடு அரசிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு அரசும் உரிய வகையில் இதற்கான முயற்சிகளைத் தாமதமின்றி மேற்கொண்டு, இவ்வரிய வரலாற்று ஆவணங்கள் அதன் தாய்மண்ணான தமிழ்நாட்டிற்குக் கொண்டு வருவதை உறுதி செய்யவேண்டும். நமது பாரம்பரியச் செல்வங்கள், அவற்றின் வரலாற்றுடன் இணைந்துள்ள தமிழ்நாட்டு மக்களிடையே பாதுகாக்கப்பட்டு, மக்கள் அவற்றைக் காணும் வகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும் எனக் கோருகின்றேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாய் நாட்டிற்கு திரும்பும் ஆனைமங்கலம் செப்பேடுகள்

### பிரதமருக்கு எச்.ராஜா நன்றி!



சென்னை, மே. 18

தமிழக பாஜக மூத்த தலைவர் எச்.ராஜா வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது;

முதலாம் ராஜராஜ சோழரின் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த "ஆனைமங்கலம் செப்புப்பட்டயங்களை" நெதர்லாந்து அரசிடம் இருந்து மீட்டு, மீண்டும் நமது நாட்டிற்கு கொண்டு சேர்த்துள்ள நமது பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

ஆனைமங்கலம் செப்பேடுகள் வெறும் கலைப்பொருள் மட்டுமல்ல. ஆசிய பெருங்கண்டம் முழுவதும் வர்த்தகம் மற்றும் ஆட்சி செய்த தமிழ் நாகரிகத்தின் வாழும் பதிவுகள் அவை. புதிய நாடாளுமன்றத்தில் செங்கோலுக்கு இடமளித்ததில் இருந்து, ஆனைமங்கலம் செப்பேடுகளைத் தாயகம் கொண்டு வந்தது வரை நமது மோடி அரசாங்கம் தொடர்ந்து தமிழ் நாகரிகத்தைக் கொண்டாடி வருகிறது.

"ஆனைமங்கல செப்புப்பட்டயங்கள்", மீண்டும் நமக்கு கிடைத்திருப்பது தமிழரான நம் அனைவருக்கும் பெருமை..!! வாழ்க பாரதம்! வாழ்க தமிழ்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலம்பெயர் தமிழர்களிடம் சீமான் பண மோசடி செய்தார்: இலங்கை எம்.பி. குற்றச்சாட்டு

சென்னை, மே. 18

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடம் கோடிக்கணக்கான ரூபாய் பணத்தைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு எந்த உதவியும் செய்யாமல் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் ஏமாற்றி விட்டதாக, இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர் பரபரப்பு குற்றச்சாட்டு சுமத்தியுள்ளார்.



இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரான ராமநாதன் அர்ஜுனன், தமிழகத்துக்கு வருகை தந்துள்ளார். நேற்று சென்னை தலைமைச் செயலகத்தில் தமிழக அமைச்சர் ராஜ்மோகனை சந்தித்தார். பிறகு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: இதே மே மாதத்தில் தான் எங்கள் இனத்தைச் சேர்ந்த 3 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இலங்கையில் கொடூரமாக இனப்படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு நீதி கிடைக்க தமிழக முதல்வர் விஜய் எங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

தமிழக மக்கள் வரலாறு காணாத மிகப் பெரிய மாற்றத்துக்கு வாக்களித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இதற்கு முன்பு ஆட்சி செய்த அரசுகள், இலங்கையில் எங்கள் இனம் அழிக்கப்படும் போது அதனை வேடிக்கை பார்த்ததை நான் நேரடியாகக் கண்டிருக்கிறேன். அந்தத் துயரமான காலகட்டத்தில், தற்போதைய முதல்வர் விஜய் எங்களுக்காக உண்ணாவிரதப் போராட்டங்களை முன்னெடுத்தார். அவர் மட்டுமல்லாது, பல அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்காக அன்று குரல் கொடுத்தார்கள். ஆனால், எங்கள் மக்களின் வலிகளைத் தற்போது சிலர், குறிப்பாக நாம் தமிழர் கட்சியைச் சேர்ந்த சீமான் உள்ளிட்டோர், தமிழக அரசியலில் வாக்கு வங்கி அரசியல் செய்வதற்காக மட்டுமே பயன்படுத்துகிறார்கள். எங்களுடைய வலிகளை யாரும் இங்கு சுயநலத்துக்காக விற்பனை செய்யக் கூடாது. ராமேசுவரத்துக்கு அகதிகளாக வந்த எங்கள் மக்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஒருவேளை உணவு கூட சீமான் வழங்கவில்லை.

இலங்கையில் இருந்து புலம்பெயர்ந்த மக்களிடம் கோடிக்கணக்கான பணத்தை சீமான் பெற்றுக் கொண்டு அவர்களுக்கு எந்த உதவியும் செய்யாமல் ஏமாற்றி விட்டார். சீமானின் மகன் அமெரிக்காவில் படிக்கிறார். ஆனால், எங்களுடைய பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் மிக மோசமான நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். தலைவர் பிரபாகரன் தனக்கு ஆயுதப் பயிற்சி அளித்ததாகவும், ஆமைக்கறி கொடுத்ததாகவும் சீமான் கூறி வருவதில் எள்ளளவும் உண்மை இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### கொளத்தூர் மக்கள் கேடுகெட்டவர்கள்

## திமுக எம்.எல்.ஏ. அனிதா ராதாகிருஷ்ணன் சர்ச்சை பேச்சு

உடன்குடி, மே. 18

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் தொகுதி திமுக எம்.எல்.ஏ. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன். இவர் கடந்த திமுக ஆட்சியில் மீன்வளம் மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சராக இருந்தார். நடந்து முடிந்த தேர்தலில் இவர் திருச்செந்தூர் தொகுதியில் 5 ஆயிரத்து 872 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரை எதிர்த்து போட்டியிட்ட தவெக வேட்பாளர் முருகன் 66 ஆயிரத்து 851 வாக்குகள் பெற்றார்.

இதனிடையே, தேர்தலில் வெற்றிபெற்றதை தொடர்ந்து திமுக எம்.எல்.ஏ. அனிதா ஆர் ராதாகிருஷ்ணன் திருச்செந்தூர் தொகுதியில் உள்ள பகுதிகளுக்கு சென்று வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று வருகிறார்.

அந்த வகையில் உடன்குடியில் நேற்று நடந்த நிகழ்ச்சியில் அனிதா ராதாகிருஷ்ணன் பங்கேற்றார். அப்போது அவர் பேசியதாவது,

எவர் எவரோ ஆட்சிக்கு வந்துவிட்டு ஏதேதோ பேசவேண்டுமென நினைக்கிறார்கள். இன்னும் 4 மாதம் தான் இந்த ஆட்சி இருக்கும்.

ஆதவ் அர்ஜுனா என்று ஒரு நபர் இருக்கிறார். ஆதவ் அர்ஜுனாவுக்கு தைரியம், திராணி இருந்தால் வில்லிவாக்கம் தொகுதி எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்துவிட்டு திருச்செந்தூருக்கு வரவேண்டும். திருச்செந்தூர் எம்.எல்.ஏ. பதவியை நானும் ராஜினாமா செய்கிறேன். இருவரும் திருச்செந்தூரில் போட்டிப்போட்டு பார்க்கலாமா?

நீங்கள் (ஆதவ் அர்ஜுனா) வளர்ந்துவிட்டால் என்ன செய்யமுடியும். இது எந்த ஊர் தெரியுமா? எந்த வகையிலும் எவரையும் வீழ்த்திவிடுவோம்.

திருச்சி கிழக்கு இடைத்தேர்தலில் மு.க.ஸ்டாலின் போட்டியிடவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியுள்ளோம். மு.க.ஸ்டாலின் தனது தொகுதியான கொளத்தூரை சிங்கப்பூர் போன்று மாற்றி வைத்திருந்தார். ஆனால், கொளத்தூர் தொகுதி மக்கள் கேடுகெட்டவர்கள்.

தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

## பொதுக்குழுவை கூட்ட கோரினால் கையெழுத்து போட வேண்டாம்

### ஆதரவாளர்களுக்கு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தல்

சென்னை, மே. 18

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, சென்னை கிரீன்வேஸ் சாலையில் உள்ள தனது இல்லத்தில் இன்று கட்சி நிர்வாகிகளை சந்தித்து ஆலோசனை நடத்தினார். முன்னதாக, அ.தி.மு.க. பொதுக்குழுவை கூட்டி சட்டமன்ற தேர்தல் தோல்விக்கான காரணத்தை ஆராய வேண்டும் என எதிரணியில் உள்ள எஸ்.பி.வேலுமணி தரப்பினர் கோரிக்கை விடுத்திருந்தனர். அதுமட்டுமல்லாமல், பொதுக்குழு உறுப்பினர்களை சந்தித்து கையெழுத்து பெறக்கூடிய வேலையில் மாவட்ட வாரியாக ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

இதனை அறிந்த அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி, பொதுக்குழுவை கூட்ட கோரினால் கையெழுத்து போட வேண்டாம் என தனது ஆதரவாளர்களிடம் கேட்டுக் கொண்டார். மேலும், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பெயரை பயன்படுத்தி கையெழுத்து கேட்டால் யாரும் போட வேண்டாம் என ஏற்கனவே கட்சியின் துணை பொதுசெயலாளர் கே.பி.முனுசாமி தெரிவித்துள்ளார்.

அதை மீண்டும் வலியுறுத்திய எடப்பாடி பழனிசாமி, தனது கட்சி நிர்வாகிகள் மற்றும் எம்.எல்.ஏ.க்களிடம் எந்த விதமான கையெழுத்தும் போட வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளார்.



### பெத்தம்பட்டியில்

# இயற்கை விவசாயம் மூலம் கருப்புகவுனி சாகுபடி நல்ல விளைச்சல் கண்டுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி அருகே உள்ள பெத்தம்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் விவசாயி கோவிந்தன் மற்றும் அவரது .வளர்மதி ஆகியோர் தங்களுக்கு சொந்தமான நிலத்தில் இயற்கை விவசாயம் மூலம் விவசாயம் செய்ய வேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டு வருகிறார். இந்த நிலையில் தனக்கு சொந்தமான நிலத்தில் ரசாயன உரங்களின் பயன்பாட்டை தவிர்த்து இயற்கை மூலம் தயாரிக்கப்பட்ட படுஞ்சகாவியம் மூலம் கருப்புகவுனி சாகுபடி செய்துள்ளார். விவசாயி வளர்மதி சாகுபடி செய்துள்ள விவசய நிலத்தினை ஒய்வு பெற்ற வேளாண்மை துணை இயக்கினர் மனோகரன் நேரில் சென்று வார்வையிட்டு விவசாயிடம் கருப்பு கவுனி சாகுபடி குறித்து கேட்டறிந்தார், அப்போது பேசிய விவசாயி வளர்மதி முன்னோர்கள் சாகுபடி செய்யப்பட்ட கருப்பு கவுனி போன்ற பல்வேறு ரகங்கள் மக்கள் மத்தியில் இருந்து மறைந்து போனது, தற்போது கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் மக்கள் மத்தியில் கருப்பு கவுனி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்ட தன் விளைவாகஒய்வு பெற்ற வேளாண்மை துணை இயக்கினர் மனோகரன் ஆலோசனைப்படி இயற்கை விவசாயம் மூலம் கருப்பு கவுனி சாகுபடி செய்யப்பட்டுள்ளது நோய் தாக்குதல் இன்றி கருப்பு கவுனி நல்ல விளைச்சல் கண்டுள்ளது, இன்னும் சில வாரங்களில் அறுவடை செய்யப்பட உள்ளதாக தெரிவித்தார், மேலும் மக்கள் மத்தியில் இருந்து மறைந்து போன கருப்பு கவுனி போன்ற பயிர்களை மீட்டெடுக்க விவசாயிகள் அதிக அளவில் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.



# டாஸ்மாக் கடை அகற்றம் பெண்களின் போராட்டம் எதிரொலி

அருமனை, மே. 18

அருமனை அருகே கடையால் மூடு சந்திப்பில் இயங்கி வந்த டாஸ்மாக் கடையை முற்றுகை யிட்டு பெண்கள் போரா ட்டம் நடத்தினார் . தகவல் அறிந்த காவல்துறையினர் வந்து பேச்சுவார்த்தைநடத்திமுடிவடையாத நிலையில் விளவங்கோடு காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் பிரவீன் அவர்கள் வந்தார். அவர் மக்களோடு மக்களாக சேர்ந்து அமர்ந்து துறை சார்ந்த அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தார் .

உடனடியாக விளவங்கோடு தாசில்தார் அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து விவரம் கேட்டும் கண்டும் தெரிந்து கொண்டார் . கடையை மாற்று வதையே குறிக்கோளாக கொண்ட பெண்கள் கலைந்து செல்லவில்லை .

பின்னர்தாசில்தார்.காவல்ஆய்வாளர் .பிர பின் எம்எல்ஏ ஆகி யோர் முன்னிலையில் கடைக்கு ள் இருந்த மது பாட்டி ல்களை யும் .பெயர் பலகையும்எடுத்துஅங்கிருந்துஅகற்றினார் .பெ ண்கள் எல்லோரும் உற்சா கமாக கூட்டாக சேர்ந்து தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.





# ஈரோடு நந்தா என்ஜினீயரிங் கல்லூரியில் 725 மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா

ஈரோடு மே 18

ஈரோடு நந்தா பொறியியல் கல்லூரியின் வெள்ளி விழா ஆண்டினையொட்டி பட்டமளிப்பு விழா நந்தா

கல்வி அறக்கட்டளை தலைவர் சண்முகன் தலைமையில் நடந்தது .நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்கள் நந்தகுமார் பிரதீப், திருமூர்த்தி தொழில்நுட்ப வளாக நிர்வாக அலுவலர் வேலுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கல்லூரி முதல்வர்ரகுபதி ஆண்டறிக்கைவாசித்தார். விழாவில் சர்வீஸ்நவ் மென்பொருள் நிறுவனத்தின் மூத்த மேலாளர் கோகுல கண்ணன் நரசிம்மன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு தரவரிசையில் இடம் பெற்ற 34 மாணவர்கள் இளங்கலை மாணவர்கள் 621 பேர் முதுகலை மாணவர்கள் 104 பேர் என மொத்தம் 725 மாணவர்களுக்கு பட்டயங்கள் வழங்கி பேசினார்.

# திருச்சி: 15கோடி மதிப்பிலான மெத்தபெட்டமைன் பறிமுதல்



திருச்சி, மே. 18

திருச்சி விமான நிலையத்தில் கோலாலம்பூர் செல்லும் விமானத்தில் போதைப்பொருள் கடத்தல் நடைபெறுவதாக கிடைத்த தகவலின் பேரில் வான் நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் பயணிகளை சோதனை இட்டனர். அப்போது ராமநாதபுரத்தைச் சேர்ந்த இரண்டுபயணிகள்தங்களது உடைமைகளில் மறைத்துவைத்து எடுத்துவந்த 15கோடிமதிப்பிலான மெத்தபெட்டமைன் போதைப்பொருளை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர். மேலும் இருவரையும்கைதுசெய்துவிசாரணைமேற்கொண்டு வருகின்றனர்.



# துறையூர்: தனியார் பேருந்து மோதி பைக்கில் சென்ற பெண் பலி

திருச்சி, மே. 18

முசிறி அருகே திருத்தலையூர் மேலக்கொட்டம் பகுதியைச் சேர்ந்த ஜெயசூர்யா, தனது தாய் வசந்தியுடன் இருசக்கர வாகனத்தில் துறையூர் அருகே கண்ணனூர் பகுதிக்குச் சென்றுகொண்டிருந்தார். அப்போது எதிரே வந்த தனியார் பேருந்து மோதியதில் வசந்தி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். ஜெயசூர்யா காயமடைந்து துறையூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகிறார். ஜம்புநாதபுரம் போலீசார் தனியார் பேருந்து ஓட்டுநர் பாலமுருகன் மீது வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



# ஈரோட்டில் இலவச ஆயுர்வேத மருத்துவ முகாம்

ஈரோடு மே 18

இலவச ஆயுர்வேத பொது மருத்துவ முகாம் ஈரோடு ரிங் ரோட்டில் உள்ள கோட்டக்கல் ஆயுர்வேத மருத்துவ மனையில் நடந்தது. மூட்டு வலி, தோல் வியாதிகள், மாதவிடாய் பிரச்சனைகள், சர்க்கரை நோய், பக்கவாதம் உள்பட பல்வேறு நோய்களுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு இலவசமாக மருந்துகளும் வழங்கப்பட்டது. சுமார் 200 க்கும் மேற்பட்டவர்களுக்கு டாக்டர் தன்யா நாயர் சிகிச்சை அளித்தார். இலவச பஞ்சகர்மா சிகிச்சையும் வழங்கப்பட்டது.

கோட்டக்கல் ஆரிய வைத்திய சாலை,அமிர்த தன்வந்திரி வைத்திய சாலா மற்றும் கேரள சமாஜம் சார்ட்டிபள் டிரஸ்ட் சார்பில் நடைபெற்ற இந்த முகாமை தொழில் அதிபர் எம் சி ஆர் ராபின் தொடங்கி வைத்தார்.



### அருமனையில்

# கவுன்சிலர் வீட்டு முன் கிடந்த ஆண் சடலம்: போலீசார் விசாரணை

மார்த்தாண்டம், மே 18

அருமனை சந்திப்பு பகுதியை சேர்ந்தவர் மேரி. இவர் அருமனை பேரூராட்சியின் 9வது வார்டு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கவுன்சிலராக உள்ளார். தற்போது மேரி வீட்டின் முன்பகுதியில் விரிவாக்க பணிகள் நடைபெற்று வருகிறது. இதற்கிடையே கடந்த சில நாட்களுக்கு முன்பு மேரி வீட்டை பூட்டிவிட்டு மருத்துவமனைக்கு சென்றதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று காலை கவுன்சிலர் வீட்டு முன்பு விரிவாக்க பணி நடைபெறும் இடத்தில் சுமார் 55 வயது மதிக்கத்தக்க ஆண்ஒருவர் இறந்த நிலையில் காணப்பட்டார். மேல் பனியனுடன்,அரைகுறை ஆரையுடன் உடல் கிடந்தது. மேலும் அவரது வேட்டி கல்லில் கட்டப்பட்டு இருந்தது. இதனை பார்த்து அக்கம் பக்கத்தினர் உடனடியாக அருமனை போலீசருக்கு தகவல் தெரிவித்தனர். புகாரின்பேரில்அருமனை போலீஸ் இன்ஸ்பெக்டர் கமலா தேவி மற்றும் போலீசார் சம்பவ இடத்தில்சென்றுஉடலை பார்வையிட்டு விசாரணை நடத்தினர்.

போலீசாரின்முதற்கட்ட விசாரணையில்இறந்தவர் அந்தபகுதியைசேர்ந்தவர் இல்லை என்பது தெரிய வந்தது. அவர் யார்? எந்த ஊரை சேர்ந்தவர் என்ற விவரம் தெரியவில்லை. இறந்தவரின் உடலில் காயங்கள் எதுவும் இல்லை. இதற்கு இடையே நேற்று மாலை ஆட்டோவில் வந்த இரண்டு பேர் கவுன்சிலர் வீட்டு முன்பு அந்த நபரை இறக்கிவிட்டு சென்றதாக தெரியவருகிறது. இதனை தொடர்ந்து போலீசார் இறந்த நபரின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக குமரி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இறந்தவர் எப்படி இறந்தார்?

மதுகுடித்துபோதையில் இறந்தாரா? அல்லது வேறு ஏதாவது காரணமா என விசாரணை நடைபெற்று வருகிறது. மேலும் ஆட்டோவில் அவரை கொண்டு வந்தவர்கள்யார்? என்பது தொடர்பாகவும் போலீசார் பல்வேறு கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர்.




### ஈரோட்டில்

# மாவட்ட அளவிலான சதுரங்க போட்டி

ஈரோடு மே 19

ஈரோடு கொள்ளுக்காட்டுமேடு பகுதியில் உள்ள அமிர்தா வித்யாலயா பள்ளியில் மாவட்ட அளவிலான சதுரங்க போட்டி நடைபெற்றது. 9, 12, 17 மற்றும் பொது பிரிவு போன்ற 5 பிரிவுகளில் நடந்த இந்த போட்டியில் 300 பேர்கலந்து கொண்டு விளையாடினர்.

இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் பதக்கம் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த போட்டியை மாதா அமிர்தானந்தா மடத்தின் சீடர் நிகிலேஷ் அமிர்த சைதன்யா மற்றும் முன்னாள் எம் எல் ஏ ஆர் எம் பழனிசாமி ஆகியோர் தொடங்கி வைத்தனர். பள்ளி மேலாளர் நிரஞ்சனா அமிர்த பிரானா பள்ளி முதல்வர் ஜெய சித்ரா ஆகியோர் வரவேற்றனர். தமிழ் மாநில சதுரங்க கழக துணை செயலாளர் டாக்டர் ரமேஷ் சதுரங்க போட்டியை ஒருங்கிணைந்து நடத்தினார்.



### தேங்காபட்டணத்தில்

# சொகுசு காரில் மண்ணெண்ணெய் கடத்தல்; 400 லிட்டர் பறிமுதல்

மார்த்தாண்டம், மே.18

கன்னியாகுமரி மாவட்ட பறக்கும் படை தனி வட்டாட்சியர் கெ எம் பாரதி தலைமையில் ஓட்டுனர் ஜாண் பிரைட் உள்ளிட்ட பறக்கும் படை குழுவினர் கிள்ளியூர் வட்டார பகுதியில் பொது வினியோக திட்ட கடத்தல் தடுப்பு ரோந்து பணியில் இருந்தனர். அப்போது சந்தேகத்திற்கு இடமாக தேங்காப்பட்டணம் என்ற இடத்தில் வந்து கொண்டு இருந்த கேரளாபதிவெண் சொகுசுகாரை தடுத்து நிறுத்தினர். அப்போது கார் ஓட்டுனர் காரை நிறுத்திவிட்டு தப்பி ஓடினார். அதிகாரிகள் காரை சோதனை யிட்ட போது, அதில் சுமார் 400 லிட்டர் மீனவர்களுக்கு மானியவிலையில் அரசால் வழங்கப்படும் வெள்ளை நிற மண்ணெண்ணெய் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதை கேரளாவுக்கு கடத்தி செல்ல இருந்தது தெரிய வந்தது. பின்னர் மண்ணெண்ணெய் கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணெய் தூத்தூர் மீனவர் கூட்டுறவு சங்க கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டது. வாகனம் விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டது.

## நாகர்கோவில் அருகே

# ரேஷன் கடைகளில் இருந்து கடத்தி வந்த 5 டன் அரிசி, கோதுமை பறிமுதல்

நாகர்கோவில், மே.18

நாகர்கோவில் அடுத்த கோவில் விளை பகுதியில் ரேஷன் பொருட்களை பதுக்கி வைத்திருப்பதாக குமரி மாவட்ட உணவு கடத்தல் தடுப்பு பிரிவு போலீசருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து போலீசார் அங்கு விரைந்தனர். அங்கிருந்த மூடைகளை சோதனை செய்தபோது அவைகள் ரேஷன் கடைகளுக்கு வழங்கப்படும் அரிசி மற்றும் கோதுமை மூடைகள் என்பது தெரிய வந்தது. இவை எந்த கடைகளில் இருந்து சப்ளை ஆனது என்பது தெரியவில்லை.

இதையடுத்து அந்த மூடைகளை போலீசார் கைப்பற்றி நாகர்கோவில் உணவு கடத்தல் தடுப்பு பிரிவு காவல் நிலையத்திற்கு லாரிகளில் கொண்டு வந்தனர். கைப்பற்றப்பட்ட உணவு பொருள்களின் மூடைகளில் தமிழ் நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தின் சீல் உள்ளது. அதில் உள்ள பதிவு எண்கள் மூலம் எந்தெந்த ரேஷன் கடைகளுக்கு இவைகள் அனுப்பப்பட்டது என்பது தொடர்பான விசாரணையை போலீசார் தொடங்கியுள்ளனர். கைப்பற்றப்பட்ட உணவு பொருட்களின் அளவு சுமார் 5 டன் வரை இருக்கும் என கூறப்படுகிறது.

இவற்றை மாவு மில் ஒன்றுக்கு அனுப்பி வைத்து, அவற்றை அரைத்து பாக்கெட்டுகளாக விற்பனை செய்ய திட்டமிட்டதாக கூறப்படுகிறது. இதில் தொடர்புடையவர்கள் யார்? என்ற விவரமும் தெரியவில்லை. ரேஷன் கடைகளுக்கான சீல் வைக்கப்பட்ட நிலையில் மூடைகள் உள்ளதால் இவை ரேஷன் கடை ஊழியர்களின் உதவியுடன்தான் கடத்தப்பட்டு இருக்கும் என கூறப்படுகிறது.

இது குறித்து போலீசார் கூறுகையில், பொதுமக்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் இவற்றை பறிமுதல் செய்யப்பட்டு இருக்கிறோம். இதில் தொடர்புடையவர்கள் யார்? என்பது தொடர்பாக விசாரணை நடந்து வருகிறது. விசாரணைக்கு பின் முழு விவரத்தையும் வெளியிடப்படும் என்று கூறினார்கள். குமரியில் மொத்தமாக ரேஷன் கடைகளில் இருந்து நேரடியாக பொருட்கள் கடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதன் பின்னழியில் இருப்பவர்களை கண்டறிந்து போலிஸ் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை எழுந்துள்ளது.

# அரசு மருத்துவர் பணிக்கான தேர்வில் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களுக்கு பணி

## ஆணை வழங்க முதல்வருக்கு கோரிக்கை

திருப்பத்தூர்:மே:18

தமிழ்நாட்டில் காலியாக உள்ள 1100 அரசு மருத்துவர்கள் பணிக்கான தேர்வினை ஜனவரி25 ஆம்தேதி மருத்துவ பணியாளர் தேர்வாணையம் நடத்தியது. அத்தேர்வை 27000 பேர் எழுதினர். மதிப்பெண்அடிப்படையில்1100 மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு மார்ச்10 ஆம் தேதி அனைவருக்கும் பணி ஆணை வழங்க சென்னைக்கு வரவழைக்கப் பட்டனர். அதில் மதிப்பெண் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் 320 மருத்துவர்களுக்கு அப்போதைய மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் அவர்கள் அரசு மருத்துவர் பணிக்கான பணி ஆணைகளை வழங்கினார். மீதமுள்ள 780 பேருக்கு அரசு மருத்துவர் பணிக்கான பணி ஆணை மறுநாள் வழங்கப்படும் என்று அறிவித்த நிலையில், அன்றே தேர்தல் தேதி அறிவிக்கப் பட்டதால் தேர்தல் நடத்தை விதிகள் அமலாகி விட்டது என்றும், மீதமுள்ள நபர்களுக்கு மே15 ஆம் தேதி அரசு மருத்துவர் பணிக்கான ஆணை வழங்கப்படும் என்றும், அனைவரும் திருப்பி அனுப்பப்பட்டனர். மருத்துவர் பணிக்கான ஆணை பெற்ற 320 மருத்துவர்கள் பணியில் சேர்ந்து இரண்டு மாதங்களாகி விட்டது. மீதமுள்ள 780 பேர் மருத்துவர் பணி ஆணை பெறாததால் பாதிக்கப் பட்டுள்ளனர். இனிமேலும் காலம் தாழ்த்தாமல் மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட 780 மருத்துவர்களுக்கு பணி ஆணை வழங்கி வாழ்வில் ஒளியேற்றுமாறு தமிழ்நாடு முதலமைச்சரை பாதிக்கப் பட்டமருத்துவர்கள்சார்பில்கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அஞ்சுகிராமம் அருகே

# 205 கிலோ போதை பொருள்கள் பறிமுதல்; 2 பேர் கைது



நாகர்கோவில், மே. 18

குமரி மாவட்டம் முழுவதும் கஞ்சா, குட்கா மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களின் விற்பனையை முற்றிலும் தடை செய்யும் நோக்கில் மாவட்ட போலீசார் பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

இந்த நிலையில் கன்னியாகுமரி அருகே அஞ்சு கிராமம் போலீஸ் நிலைய எல்லைக்குட்பட்ட மயிலாடி புதூர் பகுதியில் உள்ள கோவில் அருகே தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் பதுக்கி வைத்து விற்கப்படுவதாக போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து சப் இன்ஸ்பெக்டர் பிரியா ராஜ்குமார் தலைமையிலான தனிப்படை போலீசார் குறிப்பிட்ட பகுதியில் சென்று சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அங்கு ரகசியமாக பதுக்கி வைக்கப்பட்டிருந்த குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டது. அங்கிருந்து 7 கிலோ கூல் லிப் பாக்கெட்டுகள்மற்றும்198கிலோ புகையிலைபாக்கெட்டுகள்எனமொத்தம் 205 கிலோ தடை செய்யப்பட்ட போதை பொருட்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

மேலும் ரூ 4090 ரொக்கப் பணமும் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக போலீசார் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தினர். அதில்சட்டவிரோதமாகபுகையிலைப் பொருட்களை பதுக்கியதாக மயிலாடி பகுதியை சேர்ந்த செல்வகுமார் (38), மகேஷ் (51) ஆகிய இருவரையும் போலீசார்கைது செய்தனர். கைது செய்யப்பட்ட செல்வகுமார் அப்பகுதியில் வாட்டர் கேன் சப்ளை செய்யும் தொழில் செய்து வருபவர். மகேஷ் டிரைவர் வேலை செய்பவர் என்பதும் தெரிய வந்துள்ளது. இவர்களுக்கு வேறு நபர்களுடன்தொடர்பு உண்டா? என்பது குறித்தும் போலீசார்விசாரித்து வருகின்றனர்.



## தஞ்சாவூர் பெரிய கோவில் அருகே இருந்து

# அகழியில் கருவேல மரங்கள், புதர்கள் அகற்றும் பணி: கலெக்டர் தொடங்கி வைத்தார்

தஞ்சாவூர் மே 17

தஞ்சாவூர் பெரிய கோயில் அருகே இருந்து அகழியில் கருவேல மரங்கள் புதர்கள் அகற்றும் பணியை கலெக்டர்பிரியங்கா பங்கஜம் தொடங்கி வைத்தார்

தஞ்சாவூர் பெரிய கோவில் அருகே உள்ள அகழியில் மாவட்ட நிர்வாகம் மற்றும் சுற்றுலாத்துறை சார்பில் கருவேல மரங்கள் மற்றும் புதர்களை அகற்றி தூர்வாரும் பணி தொடங்கப் பட்டது

இப்பணியை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம், தஞ்சாவூர சட்டமன்ற உறுப்பினர்விஜய் சரவணன்முன்னிலையில் கொடியசைத்து தொடங்கி வைத்தார்

தஞ்சாவூர் மாவட்டத்தில் நீர்நிலைகளைபாதுகாக்கவும், அவசரகாலபேரிடர் மீட்பு பணி களை விரைவு படுத்தவும், தமிழ்நாடு நீர்வளத்துறை பராமரிப்பு நிதியிலிருந்து ரூபாய் 3 கோடியே 50 லட்சம் மதிப்பில் 7 புதிய அதிநவீன பொக்லின் இயந்திரங்கள் வாங்கப்பட்டுள்ளன இந்த எந்திரங்கள் மூலம் ஏரிகள், குளங்கள், கால்வாய்கள், வாய்க்கால்கள் மற்றும் நீர் வழி தடங்க ளில் தூர்வாருதல், கருவேல மரங் களை அகற்றுதல் ,புதர்களை நீக்குதல் உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும் பேரிடர் கால மீட்பு பணிகளிலும் இந்த இயந்தி ரங்கள் பயன்படுத்த ப்பட உள்ளது.

அதன்படி முதல் கட்டமாகதஞ்சாவூர் பெரிய கோவில் மற்றும் மாநகரை சுற்றியுள்ள அகழி, கல்லணை கால்வாய் தொடங்கி மேல அலங்கம், வடக்கலங்கம், மற்றும் கீழழ அலங்கம் பகுதிகள் வரை உள்ள 5 கிலோமீட்டர் தூரம் நீர் வழிப்பாதையில் காணப்படும் கருவேல மரங்கள் முள்புதர்கள் மற்றும் ஆகாய தாமரை செடிகளை அகற்றும் பணி தொடங்கப்பட்டது பெரு நிறுவனங்களில் சமூகப் பொறுப்பு நிதி மற்றும் நன்கொடை யர்களின் பங்களிப்புடன் இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு, வருகிறது. நீர் வளங்களை பாது காக்கும் இந்த உயரிய முயற்சி பொதுமக்களும் சமூக அக்கறை யுடன் பங்கேற்று ஒத்துழைக்க வேண்டும் என்றார்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் தியாகராஜன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பாலகணேஷ், மாநகராட்சி ஆணையர் கண்ணன், இந்திய தொல்லியல் துறை முதுநிலை பராமரிப்பு அலுவலர் சோபிதா, மாவட்ட சுற்றுலா அலுவலர் வரதராஜன், தாசில்தார் சிவகுமார் உள் பட பலர் கலந்து கொண்டனர்.

## குமரியில்

# வெவ்வேறு பகுதிகளில் குழந்தையுடன் இளம்பெண், பள்ளி மாணவி மாயம்: போலீஸ் விசாரணை

நாகர்கோவில், மே. 18

தக்கலை அருகே உள்ள சரவிளை பகுதியை சேர்ந்தவர் தாரிக். இவர் தற்போது வெளிநாட்டில் வேலை பார்த்து வருகிறார். இவரது மனைவி ஷைபாநிஷா(24). இந்ததம்பதியருக்கு 2 வயதில் ஒரு ஆண் குழந்தை உள்ளது. சம்பவதினம் வீட்டில் இருந்த ஷைபா நிஷா தனது மகனுடன் வெளியே சென்று வருவதாக கூறிவிட்டு சென்றுள்ளார். ஆனால் நீண்ட நேரம் ஆகியும் அவர் பின்னர் வீடு திரும்பவில்லை. இதனால் பதற்றம் அடைந்த உறவினர்கள் மற்றும் பெற்றோர்அவரையும்குழந்தையையும் பல்வேறு இடங்களில் தேடிப் பார்த்தனர். ஆனால் அவர்கள் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதை அடுத்து மாயமான மகளையும் குழந்தையும் கண்டுபிடித்து தருமாறு ஷைபா நிஷாவின் பெற்றோர் தக்கலை போலீசில் புகார்அளித்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இதுபோன்று இரணியல் அருகே உள்ள நெய்யூர் பகுதியை சேர்ந்தவர் சரவணன் மகள் சரண்யா (17) இவர் தற்போது பிளஸ் 2 படிப்பை முடித்துவிட்டு மேல் படிப்பிற்காக கல்லூரிக்கு செல்ல தயாராக இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் வீட்டிலிருந்த சரண்யா அருகில் உள்ள தபால் நிலையத்திற்கு சென்று வருவதாக தனது பெற்றோர்களிடம் கூறிவிட்டு சென்றுள்ளார். ஆனால் அதன்பிறகுஅவர்வீடுதிரும்பவில்லை. இதனால் அதிர்ச்சி அடைந்த அவரது தந்தைசரவணன்பல்வேறு இடங்களை தேடி பார்த்தும் மகள் கிடைக்காததால் இரணியல் போலீஸ் நிலையத்தில் மகளை கண்டுபிடித்து தருமாறு புகார் அளித்தார். இரணியல்போலீசார்பிளஸ் டூ முடித்த மாணவி சரண்யா குறித்து வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

## புத்துக்கோவில் பகுதியில்

# முதலமைச்சர் தளபதி விஜய் வெற்றி விழா மற்றும் இல்ல விழா



திருப்பத்தூர், மே. 18

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அடுத்த புத்துக்கோவில் முத்து மாரியம்மன் ஆலயத்தில் முதலமைச்சர் ஜோசப் விஜய் அவரின் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து தவெக கட்சி நிர்வாகிகள் அம்மனிடம்சாமிதரிசனம்செய்தனர். அதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு கேக் வெட்டியும், இனிப்புகளை, வழங்கி கொண்டாடினார்கள் உடன் மாவட்ட கொ ள்கை பரப்பு இணை அமைப்பாளர் T.V.ஜெ கன் இல்ல விழாவிற்கு V.C. முனுசாமி மாவட்ட செயலாளர் C. பிரகாசம் ஒன்றிய செயலாளர் D .மோகன்ராஜ் BE த வெக நிர்வாகி மற்றும் அறங்காவலர் அவர் கலந்து கொண்டுள்ளனர். இந்நிகழ்ச்சியில் மாவட்ட பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், ஊராட்சி செயலாளர்கள், என ஏராளமானனோர் கலந்து கொண்டு மேளதாளத்துடன் நிகழ்ச்சி நடைபெற்றது




# சிஎம் உத்தரவு: திருச்சியில் மூடப்பட்ட மதுபான கடைகள்

திருச்சி , மே. 18

தமிழக முதல்வர் ஜோசப் விஜய் அவர்கள் பள்ளி, கல்லூரி மற்றும் வழிபாட்டுத்தலங்கள் அருகே உள்ள டாஸ்மாக் மதுபானகடைகளைமூட உத்தரவிட்டார். இந்தஉத்தரவைத்தொடர்ந்து, திருச்சிரயில்நிலையம் மற்றும் மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள டாஸ்மாக் கடைகள் உட்பட நான்கு டாஸ்மாக் கடைகள் இன்று மூடப்பட்டன. இது பொதுமக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ளது.



## கன்னியாகுமரியில்

# விடுமுறை நாளில் சூரிய உதயம் காண குவிந்த சுற்றுலா பயணிகள்

கன்னியாகுமரி,மே.18

பிரசித்திபெற்ற சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். விடுமுறை மற்றும் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர். நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை யொட்டி கன்னியாகுமரியில் ஏராளமான சுற்றுலா பயணிகள் காணப்பட்டனர். காலையில் கன்னியாகுமரியில் முக்கடலும் சங்கமிக்கும் திரிவேணி சங்கமம் கடற்கரை பகுதியில் அதிகாலையில் சூரியன் உதயமாகும் காட்சியை காண ஏராளமான சுற்றுலா பயணிகள் குவிந்தனர். சூரியன் உதயமான காட்சியை கண்டு ரசித்தனர்.

அதனைத்தொடர்ந்து கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் புனித நீராடி பகவதி அம்மன் கோவிலில் சாமி தரிசனம் செய்தனர்.

பின்னர் படகுத்துறையில் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். காலையில் 7 மணிக்கு படகு சேவை தொடங்கியது. பின்னர் சுற்றுலா பயணிகள் ஆவலுடன் படகில் பயணம் செய்து விவேகானந்தர் நினைவு மண்டபத்தை பார்வையிட்டனர். கண்ணாடி இழை கூண்டு பாலம் வழியாக நடந்து சென்று திருவள்ளுவர் சிலையையும் பார்வையிட்டனர்.

கன்னியாகுமரியில் உள்ள சுற்றுலா தலங்களான காந்தி நினைவு மண்டபம், காமராஜர் மணிமண்டபம், சுனாமி நினைவுப் பூங்கா உள்பட அனைத்து சுற்றுலா தலங்களிலும் காலையில் இருந்தே சுற்றுலா பயணிகள் கூட்டம் நிரம்பி வழிந்தது. இதனால் கன்னியாகுமரியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அலைமோதியது. சுற்றுலா தலங்களில் பலத்த போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டிருந்தது. கடற்கரை பகுதியில் சுற்றுலா போலீசாரும், கடலோர பாதுகாப்பு குழும போலீசாரும் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

## அழகர்கோவில் அருகே

# கள்ளந்திரி கண்மாயில் மீன்பிடி திருவிழா



மதுரை ,மே. 18

மேலூர் அருகே கள்ளந்திரி கிராமத்திலுள்ள ஐந்து கோவில் முத்தன் சுவாமி கோயிலுக்குச் சொந்தமான பெரிய நாகினி கண்மாய் உள்ளது. இப்பகுதியில் விவசாய அறுவடைப் பணிகள் முடிந்தவுடன் ஆண்டுதோறும் சமத்துவ மீன்பிடித் திருவிழா நடத்தப்படுகிறது.

நடப்பாண்டுக்கான மீன்பிடித்திருவிழா நேற்று காலை நடைபெற்றது. இதில் கள்ளந்திரி,அழகர் கோவில் வலையபட்டி,மாங்குளம், மீனாட்சிபுரம், மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் அதிகாலையிலிருந்து கண்மாய் கரையில் காத்திருந்தனர்.

கிராம பிரமுகர்கள் கோயிலில் வழிபாடு செய்த பிறகு மீன்களைபிடிக்க அனுமதி அளித்தனர். அதன் பின்னர் ஆயிரக்கணக்கானோர் கண்மாயில் இறங்கி மீன்களை பிடித்தனர். தாங்கள் கொண்டு வந்திருந்த வலைகள், ஊத்தா ஆகியவற்றுடன் கட்லா, ரோகு, திலேபியா, விரால் ஆகிய மீன்களை பிடித்துச் சென்றனர்.



ஜூன் 12ந்தேதி காவிரி டெல்டா பாசனத்திற்காக

# மேட்டூர் அணை திறக்க வேண்டும்: இ.கம்யூ.கட்சி மாநில செயலாளர் வீர பாண்டியன் பேட்டி

தஞ்சாவூர், மே.18

தஞ்சாவூரில் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின்மாநில செயலாளர்வீரபாண்டியன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள முதல்அமைச் சர் விஜய் மக்களின் எதிர்பார்ப்புபடி நல்லாட்சி தர வேண்டும். ஒரு புதிய அரசு நிலைபெறுவதற்கு நாட்கள் ஆகும். தனது கொள்கை, நடை முறைகளில் அவற்றை முன்னெடு ப்பதில் காலநேரம் தேவைப்படும். எனினும், அரசு மிக முக்கியமான இலாக்காக்களை இன்னும் ஒதுக்க ப்படாமல் இருக்கிறது. அது குறித்து கூடுதல் கவனம் செலுத்த வேண் டும். அரசை ஆதரிப்போம் நாங்கள் வெளியில் இருந்து அரசுக்கு உழைக்கிற மக்களின் கோரிக்கை களை முன்மொழிவோம். தமிழக த்தின் நலன் சார்ந்த கோரிக்கை களை முன்மொழிவோம்.எங்களை பொறுத்த வரை அரசு தமிழக நலன் களில், உரிமைகளில் உறுதியாக இருக்க வேண்டும். அரசை மிகவும் உறுதியாக நாங்கள் ஆதரிப்போம். அதே வேளையில் எளிய மக்களின் குரலாய் நாங்கள் ஒலிப்போம்.

வருகின்ற ஜூன் 12ந்தேதி காவிரி டெல்டா பாசனத்திற்காக மேட்டூர் அணை திறக்க வேண்டும். அதே போல், விவசாயிகளின் பயிர் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். ஒன்றிய அரசு அதற் கான மானியங்களை, உதவிகளை செய்ய வேண்டும். கிடப்பில் இருக் கிற நிதிகளை தங்கு தடையின்றி தரவேண்டும். தமிழகத்திற்குரிய நீரை கர்நாடகா அரசு தங்கு தடை யின்றி வழங்க வேண்டும். அதில் இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுதி யாக இருக்கும். தவறினால் ஒரு போராட்ட குரலை எழுப்பு வோம், அதில் எந்த சமரசத்திற்கும் இடமில் லை.பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு ஒன்றிய அரசு மாநிலங் களுக்கு மானியங்களை தர வேண் டும். இந்த நெருக்கடியான நேரங் களில் தமிழக அரசுக்கு நிதி தர வேண்டும். பெட்ரோல், டீசல், கியாஸ் சிலிண்டர் விலை உயர்வு குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தி, அவற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஆழ்கடலில் மர்ம குகை ஆராய்ச்சி: இத்தாலி நீச்சல் வீரர்கள் 5 பேர் மூச்சுத்திணறி பலி



மாலி, மே. 18

மாலத்தீவில் கடலுக்கு அடியில் இருக்கும் குகையை ஆய்வு செய்யும் முயற்சியில் ஈடுபட்ட இத்தாலி நாட்டு நீச்சல் வீரர்கள் 5 பேர் உயிரிழந்தனர்.

சுற்றுலாப்பயணிகளின் சொர்க்கபுரியான மாலத்தீவு கடல் பரப்பில், ஆங்காங்கே கடலுக்கு அடியில் நூற்றுக்கணக்கான மர்ம குகைகள் நிறைந்துள்ளன. இந்த ஆபத்தான நீருக்கடி குகைகளின் ரகசியங்களை ஆராய, உலக நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் தொடர்ந்து ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அந்த வகையில், இத்தாலியின் புகழ்பெற்ற ஜெனோவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சுற்றுச்சூழல் பேராசிரியை மோனிகா மான்டெ பால்கோன், அவரது மகள் ஜியோர்ஜியா உள்பட 4 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஒரு படகுபயிற்றுநர்என5பேர்கொண்ட குழுவினர்மாலத்தீவு வந்தனர். அவர்கள் தலைநகர் மாலேயில் இருந்து 64 கி.மீ. தொலைவில் உள்ள 'வாவூ அட்டோல்' என்ற ஆழ்கடல் பகுதிக்கு சென்றனர்.

சுமார் 60 மீட்டர் ஆழத்தில் உள்ள இருண்ட குகைக்குள் அவர்கள்நுழைந்து ஆய்வு செய்தபோது, கடலில்திடீரென ராட்சத நீர்ச்சுழல் ஏற்பட்டது. இதனால் குகைக்குள் இருந்து வெளியேற முடியாமல் அவர்கள் சிக்கிக்கொண்டனர். ஆழமான பகுதியில் நிலவிய கடும் ஆக்சிஜன் நச்சுத்தன்மை காரணமாக, 5 பேரும் மூச்சுத்திணறி அடுத்தடுத்து பரிதாபமாக உயிரிழந்தனர்.

உயிரிழந்த நீச்சல் வீரர்களில் 4 பேர் ஜெனோவா பல்கலைக்கழக குழுவை சேர்ந்தவர்கள். அவர்களில் சூழலியல் பேராசிரியர் மோனிகா மான்டெபால்கோன், அவரதுமகள், இரண்டு ஆராய்ச்சியாளர்களும்அடங்குவர். இதுவரை ஒரு சடலம் மட்டுமே மீட்கப்பட்டுள்ளது, மீதமுள்ளவர்களை மீட்கும் முயற்சிகளுக்கு மோசமான வானிலை தடையாக உள்ளது. விரைவில் மீண்டும் மீட்பு பணி துவங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

# சேலம் மேதகு ஆயருக்கு நினைவுப் பரிசு



சேலம் மறை மாவட்ட சின்ன கொல்லப்பட்டி மலை மாதா இடைவிடா சகாய அன்னை ஆலயத்தில் எட்டு நாட்களுக்கானத் திருவிழா மே17ல் தொடங்கி மே 24 வரை நடைபெற்று வருகிறது.முதல்நாள் முனைவர் மேதகு அருட்செல்வம் இராயப்பன் கொடியேற்றி வைத்து அனைவருக்கும் அருளுரையாற்றி ஆசிர்வாதம் வழங்கினார்.அதுசமயம் உயிர்மெய்த் தமிழ்ச்சங்கம்,உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் சார்பில் மாநிலத்தலைவர் "சேலத்துபாரதி" சொற்கோ சொல்லரசர் இயேசு கிறிஸ்து மற்றும் தேவமாதா ஆகியோரின் திரு உருவச் சிலைகளை ஆயருக்கு வழங்கி அவரிடம் ஆசி பெற்றார்.அப்போது பங்குத் தந்தை அருட்பணி சி. சகாயராஜ், களரம்பட்டி பா.தினேஷ்குமார்,தமிழரசு,ஆசிரியர் ரகுநாத்,இதழாளர் ஷியாம்சுந்தர் உட்பட பலர் பங்கேற்றனர்.

புது குடியிருப்பு பகுதி

# மதுபான கடையை மூடக்கோரி போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியதால் கைவிடப்பட்ட போராட்டம்



நாகர்கோவில் மே 18

கன்னியாகுமரிமாவட்டம் வடசேரி காந்திநகர் புதுகுடியிருப்பு பகுதியில் உள்ள டாஸ்மார்க் மதுபான கடை எண் 4713 ஐ திறக்கக் கூடாது என கூறி அப்பகுதி பொதுமக்கள் கடை வாசலை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்பகுதியில் திருமண மண்டபம்,தேவாலயம் இந்து கோவில் உள்ளிட்ட வழிபாட்டு தலங்கள் இருப்பினும் கடையை அடைக்க மாவட்ட நிர்வாகம் முன்வரவில்லை என குற்றச்சாட்டி உடனடியாக அப்பகுதி மக்களின் நலன் கருதி மதுக்கடையை அடைக்கவில்லை என்றால் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரிவித்தனர். தமிழக முதல்வராக தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் ஜோசப் விஜய் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து தமிழகத்தில் 717 டாஸ்மார்க் மதுபானகடைகளைஅடக்க உத்தரவிட்டார் அதில் கோவில்கள்,கல்வி நிறுவனங்கள் பேருந்து நிலையம் இருக்கும் பகுதியில் இருந்து 500 மீட்டர் இடைவெளியில் உள்ள மதுபான கடைகளை அடைக்க உத்தரவிட்டார்

அதன்படி முதற்கட்டமாக அடைக்கப்பட்டது மேலும் சில கடைகள் வழிபாட்டுத் தலங்கள் பள்ளிக்கூடம் அருகாமையில் உள்ள கடைகளை அடைக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் தமிழகம் முழுவதும் கோரிக்கை விடுத்து வருகின்றனர், அந்த வகையில் கன்னியாகுமரி மாவட்டம் வடசேரி காந்திநகர் பகுதியில் உள்ள கடை எண் 47 13 என்ற கடையை அடைக்க வேண்டும் என பொதுமக்கள் போராடி வருகின்றனர் அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மதுபிரியர்கள்தகாத வார்த்தைகளால் பேசி சண்டையிடுவதாகவும்குற்றம்சாட்டி மதுக்கடை வாசல் முன்பு குவிந்து கடை அடைக்க கோஷங்களை எழுப்பி போராடினர் மேலும் மதுகடை அருகே உள்ள குளத்தில் விழுந்து குடிபோதையில் மதுபிரியர்கள் உயிரிழப்பு ஏற்படுகிறது இந்த மதுக்கடைகளை திறக்க விடமாட்டோம், மாவட்ட நிர்வாகம் இதனை கருத்தில் கொள்ளாமல் மதுக்கடையை அடைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என குற்றம்சாட்டினர் உடனடியாககடையைஅடைக்க நடக்கவில்லை எடுக்கவில்லை என்றால் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் எனவும் தெரிவித்தனர். இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் போராட்டம் நடத்தியவர்களுடன்பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு டாஸ்மார்க் மதுபான கடை நுழைவாயிலைஅடைத்தனர். மேலும் போராட்டம் நடத்தியவர்களை பார்த்து இனி இந்த நுழைவாயில் திறக்கப்பட மாட்டாது எனவே நீங்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து செல்லுங்கள் என கேட்டுக் கொண்டனர். இதனை ஏற்றுக் கொண்ட பொதுமக்கள் தங்களுடைய போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இதனால் நீண்ட நேரமாக ஏற்பட்ட பரபரப்பு முடிவுக்கு வந்தது.



கன்னியாகுமரி

# படகு தளத்தில் குவிந்த மணல் குவியல் அகற்றம்

கன்னியாகுமரி,மே.18

கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்து உள்ள பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும் அதன்அருகில்உள்ள மற்றொரு பாறையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையும் எழுப்பப்பட்டு உள்ளது. இவற்றை தினமும் ஆயிரக்கணக்கான உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் படகில் சென்று பார்த்து வருகிறார்கள். இவற்றை பார்வையிட செல்லும் சுற்றுலா பயணிகளுக்கு வசதியாக தமிழக அரசு நிறுவனமான பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் சார்பில் பொதிகை, குகன், விவேகானந்தா ஆகிய 3 படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர கன்னியா குமரியில் இருந்து வட்டக்கோட்டைக்கு கடலில் உல்லாச பயணம் செய்வதற்காக திருவள்ளுவர், தாமிரபரணி ஆகிய 2 அதிநவீன சொகுசு படகுகளும் உள்ளன. இந்த 5 படகுகளும் கன்னியாகுமரியில் உள்ள பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக படகுத்துறையில் நிறுத்தி வைக்கப்பட்டு உள்ளன.

கடலில் நீர்மட்டம் தாழ்வாகி கடல் உள்வாங்கும் போது இந்த படகுகள் தரை தட்டி நிற்கின்றன. இதைத்தொடர்ந்து படகு துறையில் குவிந்துகிடக்கும்மணல்குவியல்களை அகற்ற பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழகம் நடவடிக்கை மேற்கொண்டு உள்ளது. கன்னியாகுமரி பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக படகு துறையில் தூர்வாரும் பணி கடந்த 2 தொடங்கி நடைபெற்றது. மணல் குவியல்களை ராட்சத பொக்லைன் இயந்திரம் மூலம் அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று பின்னர் நிறைவடைந்தது.

# ஜெயலலிதா இருந்திருந்தால் விஜய்க்கு பூங்கொத்து கொடுத்தவர்களை அடுத்த நிமிடமே கட்சியில் இருந்து தூக்கி இருப்பார் அதிமுக முன்னாள் எம்.பி., சிவசாமி

சென்னை, மே. 18

அரசியலில் வெற்றிதான் முகவரியை கொடுக்கும். அதுதான் ஒரு கட்சியை தொடர்ந்து உயிர்ப்புடன் வைத்திருக்கும். தொடர் தோல்விகளை சந்திக்கும் கட்சிகள் கலகலத்துபோவ துடன், காற்றில் வைத்த கற்பூரமாக கரைந்து காணாமல் போய்விடும் ஆபத்து இருக்கிறது. இதற்கு பல உதாரணங்கள் உள்ளன.

அப்படி ஓர் அபாயம்தான் இப்போது அ.தி.மு.க.வுக்கு ஏற்பட்டு இருக்கிறது. நெருக்கடிகள், சோதனைகள் என்பது அ.தி.மு.க.வுக்கு ஒன்றும் புதிது அல்ல. கடந்த காலங்களில் இதைவிட மோசமான பல சோதனைகளையும், நெருக்கடிகளையும் சந்தித்து அதிலிருந்து 'பீனிக்ஸ்' பறவையைப் போல மீண்டு எழுந்திருக்கிறது. ஆனால் இப்போதைய நிலையில் கொஞ்சம் மாறுபாடு உள்ளது. அதாவது எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா போல் மக்களை கவர்ந்து இழுக்கும் மாபெரும் தலைவர் ('மாஸ் லீடர்') யாரும் இல்லாத நிலையில், அ.தி.மு.க. மிகப்பெரிய சோதனைக்கு உள்ளாகி இருக்கிறது. எம்.ஜி.ஆரை அடுத்து, அவருடன் ஏற்கனவே பல படங்களில் நடித்து மக்கள் மத்தியில் பிரபலமாக விளங்கிய ஜெயலலிதா அ.தி.மு.க.வின் தலைமை பொறுப்புக்கு வந்தார். ஆனால் அவருக்கு பிறகு அந்த இடத்துக்கு வந்த எடப்பாடி பழனிசாமி சாதாரண விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர். கட்சியில் அடிமட்ட தொண்டராகஇருந்துபடிப்படியாகஉயர்ந்து,சூழ்நிலைகள் காரணமாக முதல்அமைச்சர்நாற்காலியில்அமர்ந்ததோடு, தன்னை வலுப்படுத்திக் கொண்டு பொதுச் செயலாளரும் ஆனார். நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் 234 தொகுதிகளுக்கும் தனி மனிதராக சென்று பிரசாரங்களை மேற்கொண்டார். அந்த வகையில் தொண்டனை தலைவனாக பெற்ற கட்சி என்ற பெருமை அ.தி.மு.க. வுக்கு உண்டு. இந்தநிலையில், சென்னையில், அதிமுக முன்னாள் எம்.பி., சிவசாமி செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது: அம்மா அவர்கள் 100 ஆண்டு காலம் இந்த இயக்கம் இருக்கும் யாராலும் அசைக்க முடியாது என்று சொன்னார்கள் அதுபோல இந்த இயக்கத்திற்கு பல சோதனைகள் வந்தது. புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். மறைவிற்கு பிறகு கட்சிக்கு சோதனை வந்தது. அந்த சோதனையை வென்றெடுத்து புரட்சி தலைவி அம்மா பொதுச்செயலாளராக பொறுப்பேற்றார். அதற்கு பின்னாலே ஒரு சோதனை வந்தது. அந்த சோதனையையும் மீட்டெடுத்து அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இந்த அதிமுகவின் தலைமை பொறுப்பை ஏற்றார். இன்றைக்கு ஒரு சோதனை வந்திருக்கிறது.

அந்த சோதனையை பொறுத்தவரைக்கும் இது சோதனையே இல்லை. இவ்வளவு காலம் வந்ததெல்லாம் சோதனை என்றே சொல்லலாம். ஆனால் இன்றைக்கு சிலர் தங்கள் சுயநலத்திற்காக சுய லாபத்திற்காக பதவி சுகபோகத்திற்காக அவர்கள் வேறு இடத்திற்கு சென்று இருக்கிறார்கள். அதனைத்தான் சொல்ல முடியும். இன்றைக்கு இந்த இயக்கம் தூய்மைபடுத்தப்பட்டுள்ளது. கட்சியில் இருந்து ஒருவர் வெளியே செல்கிறார் என்றால் 100 பேர் உள்ளே வருகிறார்கள் அதுதான் இந்த இயக்கம்.

தவெகவிற்கு ஆதரவு தெரிவித்த 25 எம்.எல்.ஏக்கள் பதவிகள் பறிக்கப்படும். மீண்டும் தேர்தல் வரும் அண்ணன் எடப்பாடியார் யாரை சொல்கிறாரோ அவர் தேர்தலில்போட்டியிடுவார்.அவர்வென்றுசட்டசபையில் அமருவார். இந்த விவகாரத்தில் சபாநாயகருக்கு 3 மாதம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அவர் பதிலை சொல்லவில்லை என்றால் நீதிமன்றத்தை நாடி வெற்றியை நிலைநாட்டுவோம். ஆண்டுக்கு ஒருமுறை பொதுக்குழு நடைபெறும். இப்போழுது பொதுக்குழுவை கூட்ட அவசியமில்லை. ஜெயலலிதா அம்மா இருந்திருந்தால் விஜய்க்கு பூங்கொத்து கொடுத்தவர்களை, அவர்கள் கொடுத்தபோதே அடிப்படை உறுப்பினர் பொறுப்பிலிருந்தே நீக்கியிருப்பார். அதிமுக வின் தோல்விக்கு நான் முதற்கொண்டு நாம் எல்லோரும் காரணம். நமது பிள்ளைகளிடம் அதிமுகவுக்கு ஓட்டுபோட வலியுறுத்தாமல் விட்டுவிட்டோம். இவ்வாறு அவர் கூறினார்



கோபி குள்ளம்பாளையத்தில் தமிழ்நாடுஅரசு போக்குவரத்து கழகம் ஈரோடு மண்டலத்துக்குட்பட்ட 13 கிளைகளின் மாற்றுக் கட்சி போக்குவரத்து தொழிலாளர் சங்கத்தினர் தமிழக வெற்றிக் கழகத்தில் அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் முன்னிலையில் தங்களை இணைத்துக் கொண்டனர் .நிகழ்ச்சியில் முன்னாள் மத்திய சங்கத் தலைவர் ஆர். சுகுமார், அந்தியூர் கிளை அண்ணா தொழிற்சங்க முன்னாள் செயலாளர் கே.எம்.குமரவேல் உடனிருந்தனர்.

நகரப் பகுதியில் உள்ள லாஜுகள் மற்றும் காட்டேஜ்களில்

# கூடுதல் கட்டணம் எதிரொலி கிராமப்புற பகுதிகளில் உள்ள தங்கும் விடுதிகளுக்கு செல்லும் சுற்றுலா பயணிகள்

ஊட்டி, மே. 18

மலை மாவட்டமான நீலகிரியில் ஆண்டுதோறும் மே மாதம் கோடை சீசன் துவங்கி தோட்டக்கலை துறை சார்பில் ஊட்டி, குன்னூர், கோத்தகிரி, கூடலூர், காட்டேரி பகுதிகளில் உள்ள பூங்காக்களில்ரோஜா,மலர்,பழம்,காய்கறி, வாசனை திரவியம்,

மலைத் தோட்ட காய்கறி பயிர்கள் கண்காட்சிகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் சுற்றுலா பயணிகளை மகிழ்விப்பதற்காக நடத்தப்பட்டு வருகிறது. இது போன்ற கண்காட்சிகளை பார்த்து ரசிப்பதுடன்சுற்றுலாதலங்களையும்கண்டு களிக்க வரும் சுற்றுலா பயணிகள் குன்னூர், ஊட்டி,கோத்தகிரி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள லாட்ஜுகள் மற்றும் காட்டேஜ்களில் தங்கி செல்வது வழக்கம்.இந்த ஆண்டு நகரப் பகுதிகளில் உள்ள தங்கும் விடுதிகளில் கட்டணம் பல மடங்கு உயர்த்தப் பட்டுள்ளதால் பெரும்பாலான சுற்றுலா பயணிகள் நகரப் பகுதிகளில் தங்குவதை தவிர்த்து கிராமப்புற பகுதிகளில் உள்ள தந்து விடுதிகளுக்கு படையெடுத்து வருகின்றனர்.

இதனால் கிராமப் பகுதியில் உள்ள காட்டேஜ் கள் மற்றும் சொகுசு பங்களாக்களில் சுற்றுலா பயணிகள் தடையில்லாமல் தங்கி செல்கின்றனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.